# 26-05-2024 செய்தி

## கேன்ஸ் திரைப்பட விழா: அனசுயா சென்குப்தாவுக்கு சிறந்த நடிகை விருது

- பல்கேரிய நாட்டு இயக்குநர், கோன்ஸ்டன்டின் போஜநோவ் இயக்கிய 'தி ஷேம்லெஸ்' என்ற ஹிந்தி திரைப்படத்தில் நடித்ததற்காக இந்தியாவைச் சேர்நத அனசுயா சென்குப்தாவுக்கு கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்பட்டது.
- புதிய பரிமாணத்திலான திரைப்படங்களை ஊக்குவிக்கும் 'தி அன் சேர்டைன் ரிகார்ட்' என்ற பிரிவின்கீழ் சிறந்த நடிகையாக அனசுயா சென்குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- இதன்மூலம் இந்த விருதை பெறும் முதல் இந்திய கலைஞர் என்ற பெருமையை கொல்கத்தாவைச் சேர்ந்த அனசுயா பெற்றுள்ளார்.

**புதிய பரிமாண திரைப்படங்களுக்கு விருது:**

- புதிய நாடுகள் புதிய பரிமாணத்தில் எடுக்கப்படும் திரைப்படங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 'தி அன் சேர்டைன் ரிகார்ட்' என்ற பிரிவின் கீழ் கேன்ஸ் திரைப்பட விழாவில் விருதுகள் வழங்கப்படுகின்றன.
- இந்தப் பிரிவின் உயரிய விருதான தி அன் சேர் டைன் ரிகார்ட் விருது 'பிளாக் டாக்' என்ற திரைப்படத்துக்கு வழங்கப்பட்டது.

SURESH'